
புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2053 ஜனவரி 12, 2023 புரட்சி 21 முழக்கம் 52 விலை: ரூ.3.00

# ஆளுநர், தமிழ்நாட்டை விட்டு வெளியேறட்டும்!

ஆளுநர் ரவிக்கு என்ன ஆயிற்று என்றே புரியவில்லை, பழமொழி ஒன்றை கிராமத்தில் கூறுவார்கள், ஆற்றின் மீது கோபித்துக் கொண்டு கால் கழுவாமல் போய் விட்டானாம் ஒருவன், அதைப்போல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அவர் ஆற்ற வேண்டிய உரைக்கு ஜனவரி ஏழாம் தேதி ஒப்புதல் அளித்து விட்டு சபைக்கு உரையாற்ற வருகின்ற போது அதில் அவருக்கு கசக்கின்ற வார்த்தைகளை உச்சரிக்கவே மறுத்து விட்டார். ஆளுநரின் செயலை தமிழக சட்டமன்றம் ஏற்காத நிலையில் அவரே வெளி நடப்பு செய்து விட்டார். அதுவும் ‘தேசிய கீதத்தை’ப் புறக்கணித்து வெளி நடப்பு செய்துள்ளார். அவருக்கு ஒவ்வாமையாக அமைந்து போன, அவர் வெறுக்கின்ற வார்த்தைகள் என்ன தெரியுமா?

திராவிட மாடல், சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, திராவிட மாடல் இத்தனைக்கும் மேலாக அம்பேத்கர், பெரியார், அண்ணா, காமராசர், கலைஞர், இவை அனைத்தும் உச்சரிப்பதற்கு அவர் வாய் மறுத்து விட்டது. உரையில் அடங்கியிருக்கிற இந்த சொற் றொடர்களை அவர் பேச மறுத்து அதற்கு பதிலாக வேறு கருத்துக்களை அவர் முன் வைத்திருக்கிறார். அவருக்கு பிடித்ததெல்லாம் சனாதனம், பாரதம், ஆரியம், வேதம், ஆர்.எஸ்.எஸ். தான்.

அரசு தயாரித்த உரைக்கு ஒப்புதல் அளித்து விட்டு அதை சட்டப்பேரவையில் படிக்காமலே போகின்ற ஒரு ஆளுநர் அரசியலமைப்பு கடமையைத் தான் செய்கிறாரா? ‘திராவிட மாடல்’ என்பதே தேச விரோதம் என்று பேசியவர்கள் இப்பொழுது தேசிய கீதத்தையே தேச விரோதப் பட்டியலில் சேர்த்து விட்டார்கள் போல. தமிழக முதல்வர் தமிழக சட்டசபையின் இறையாண்மையையும் சுயமரியாதையையும், ஆளுநரைத் துணிவுடன் எதிர் கொண்டு காப்பாற்றி, வரலாற்றில் மேலும் ஒரு புகழ் மகுடத்தைச் சூடிக் கொண்டிருக்கிறார்.

அரசு தயாரித்த அதிகாரப்பூர்வ உரையை மட்டுமே சட்டசபைக் குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும். அரசு தயாரித்த உரையின் பல பகுதிகளை ஆளுநர் ஏற்க மறுத்துள்ளது வருத்தமளிக்கிறது என்று ஆளுநர் முன்னிலையிலேயே தீர்மானம் கொண்டு வந்து ஒரு மனதாக அவையை ஏற்கச் செய்துள்ளார். இது முதல்வர் தீர்மானம் மட்டுமல்ல, தமிழர்களின் ஒருமித்த உணர்வு!

பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்களில் இத்தகைய ‘மன நோயாளிகளை’ ஆளுநர்களாக அனுப்பி வைத்து அங்கே பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் உருவாக்குவதே தனது அரசியல் சட்டக் கடமை என்று கருதிக் கொண்டிருக்கிறது சனாதனம் பேசிக் கொண்டிருக்கிற ஒன்றிய ஆட்சி. எதையும் நியாயப்படுத்துவதற்கு அவர்கள் தொண்டர்கள் எப்படியோ வருவார்கள் விவாதங்களில் அவர்கள் இப்படி கூட பேச முடியும் ஏழாம் தேதி தான் ஆளுநர் ஒப்புதல் அளித்தார். 9ஆம் தேதி அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றெல்லாம்கூட பேசி ஆளுநரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதற்கு ஒரு கூட்டம் இங்கே தயாராகிக் கொண்டு இருக்கிறது.

அரசு தயாரித்த உரையை சட்டமன்ற அவைக் குறிப்பில் பதிய விடாது நீக்கும் உரிமையை அவருக்கு யார் தந்தது? எந்த சட்டப் பிரிவில் அதற்கு இடமிருக்கிறது?

2016இல் அருணாசலப் பிரதேசத்திலிருந்து ஒரு வழக்கு உச்சநீதிமன்றம் வந்தது (நபம் ரெபியா எதிர் துணை சபாநாயகர்) அந்த வழக்கில் அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர் தெரிவித்த வழிகாட்டும் கருத்துகளின் அடிப்படையில் உச்சநீதிமன்றம் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளது.

“ஆளுநருக்கு அதிகாரம் வழங்கும் 163ஆவது சட்டப் பிரிவு மாநில அமைச்சரவை அளிக்கும் அறிவுரைக்கு உட்பட்டது. அமைச்சரவை அறிவுரை இல்லாது செயல்பட அதிகாரம் இல்லை. அதற்கு எதிராக செயல்படும் தனித்த அதிகாரமும் ஆளுநருக்கு இல்லை” என்று திட்ட வட்டமாக தெளிவுபடுத்தியிருக்கிறது. ஏதோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி போல் தமிழ்நாட்டுக்கே அன்னியரான ஒரு ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி, ஆளுநர் என்ற அதிகாரப் போர்வைக்குள் பதுங்கிக் கொண்டு ‘நாட்டாண்மை’ செய்வதை தமிழ்நாடு ஏற்காது; ‘ஆளுநரே! வெளியேறு!!’ என்ற முழக்கம் தமிழ்நாடு தழுவி ஒலிக்கட்டும்!

– புரட்சிப் பெரியார் முழக்கம் 12.01.2023

## சிறப்பு வினா விடை

- தி.மு.க. பொதுக் கூட்ட மேடையில் பேசுவதை எல்லாம் ஆளுநர் பேச வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? **– அண்ணாமலை**

  நியாயம் தான். ஆளுநர் அவர் பேசும் பொதுக் கூட்ட மேடையில் பேசுவதைத் தானே சட்டசபையில் பேச முடியும். அப்படித்தான் அவரே எழுதிக் கொண்ட அரசியல் சட்டத்தின் மீது உறுதி மொழி எடுத்திருக்கிறார் போல!

- ‘தேசிய கீதம்’ பாடலையும் புறக்கணித்து ஆளுநர் வெளியேறியது தேசத்துக்கு அவமதிப்பு. **– அமைச்சர் தங்கம் தென்னரசு**

  அதெல்லாம் இல்லை. ஆளுநர் ஏற்றுக்கொண்ட தேசிய கீதம் ‘வந்தே மாதரம்’. ‘ஜனகணமன’ அவருக்குப் பிடிக்காது.

- ஆளுநரை வைத்துக் கொண்டே முதல்வர் தீர்மானம் கொண்டு வந்தது தவறு. **– அண்ணாமலை**

  முதல்வரை வைத்துக் கொண்டே அரசு தயாரித்த உரையின் பகுதிகளை நீக்கி விட்டுப் பேசியது – ஆளுநரின் ‘பெருந்தன்மை’யோ?

- பெரியார், அண்ணா, காமராசர் பெயரை எல்லாம் நீக்கி விட்டு ஆளுநர் உரையை வாசித்தது எல்லாம் எங்களுக்கு எப்படி தெரியும். **– எடப்பாடி**

  அதுவும் சரி தான். ஆளுநர் உரையை படிக்காமலே ‘உப்பு சப்பில்லை’ என்று கூறுவதற்கு மட்டும் தான், எங்களுக்குத் தெரியும்.

- நாங்கள் ஆளுநர் உரையைக் கேட்கத்தான் வந்தோம்; முதலமைச்சர் உரையைக் கேட்க அல்ல. **– எடப்பாடி**

  அதற்கு ஆளுநர் மாளிக்கைக்கோ, ஆர்.எஸ்.எஸ். ஷாகாவுக்கோ போயிருக்கலாம். சட்டசபைக்கு வந்திருக்க வேண்டாம்.

- ஆளுநருக்குத் தெரியாமலே அச்சடித்த உரையை அவர் எப்படி படிப்பார்? **– வானதி**

  என்னது... ஆளுநருக்குத் தெரியாதா... அவர் படித்து ஒப்புதல் தந்ததுகூட வானதிக்கு தெரியாதா? பொது மக்களிடம் போய் இப்படி எல்லாம் உளறாதீங்க...

- சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கர் பெயரைக்கூட படிக்க மறுத்தார் ஆளுநர். **– தங்கம் தென்னரசு**

  தமிழக அரசு கூறும்போது அம்பேத்கர்கூட ஆளுநருக்கு ‘அலர்ஜி’ தான்!

- சட்டசபையிலிருந்து ஆளுநர் வெளி நடப்பு. **– செய்தி**

  அடுத்து சட்டசபை முற்றுகைப் போராட்டம் நடத்துவார் போல!

- ஆளுநருக்கு எடப்பாடி ஆதரவு. **– செய்தி**

  அடப்‘பாவிகளே’ ஆளுநர்கள் கண்களில் விரலை விட்டு ஆட்டிய ஜெயலலிதாவையே இப்படி அவமதிக்கிறீர்களே! இது அடுக்குமா?

- தொலைக்காட்சி விவாதங்களை சில ஆண்டுகளாகப் புறக்கணித்த பா.ஜ.க.வினர் ஆளுநருக்காக மீண்டும் பேச வந்து விட்டனர். **– செய்தி**

  பாவம் ரவி! அவருக்கு மேலும் குழி பறிக்க இந்த பஜனைக் குழுவே போதும்!

தலையங்கம்

## அது என்ன “பாரதம்”?

ஆளுநர் ரவியின் உளறல் பேச்சுக்கு தமிழ்நாடு இப்போது கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு என்ற பெயரை தமிழகம் என்று அழைக்க வேண்டும் என்று ஆளுநர் ரவி பேசியிருக்கிறார்.

சன்தொலைக்காட்சிநடத்திய விவாதம் ஒன்றில் பங்கேற்ற பேராசிரியர் வீ. அரசு தமிழகம் என்றாலே தமிழ்நாடு என்பதுதான் அதற்குப் பொருள் என்று சரியான விளக்கத்தைத் தந்திருக்கிறார். ஆளுநருக்கு சொல்லிக் கொடுத்தவர்கள் இதைக் கூட சொல்லிக் கொடுக்காமல் இருந்திருக்கிறார்களா? என்ற கேள்வியை அவர் எழுப்பி இருக்கிறார்.

சரி; தமிழ்நாட்டை தமிழகம் என்று அழைக்க வேண்டும், தமிழ்நாடு என்று அழைக்கக் கூடாது சொல்லுகிற ஆளுநராக இருந்தாலும் சரி, அவரது சங்பரிவார் கூட்டமாக இருந்தாலும் சரி இந்தியாவை இந்தியா என்று அழைக்காமல் பாரதம், பாரதீயம் என்று அழைப்பது ஏன்?

அவர்கள் கட்சிகளுக்கும் துணை அமைப்புகளுக்கும் இந்தியா என்ற பெயரை முழுமையாக தவிர்ப்பது ஏன்? இதற்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும்.

பாரதம், பாரதம் என்றால் என்ன? இதற்கு ஆதாரம் புராணங்களில் அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். கால்டுவெல் ‘பரத கண்ட புராதனம்’ என்ற ஒரு தமிழ் ஆய்வு நூலை எழுதியிருக்கிறார். அதில் ‘பரத கண்டம்’ பாரதம் என்பதற்கு சரியான விளக்கத்தைக் கூறியிருக்கிறார்.

பரதன் என்ற அரசர் சந்திர குல வம்சத்தைச் சேர்ந்தவன். முதல் சக்கரவர்த்தியாக இந்து தேசத்தை ஆண்டவன் அவன் தானாம். தன்னுடைய இராஜ்யத்தில் இந்து தேசத்தின் சகலப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரே குடையின் கீழ் ஆண்டான் என்று, மகாபாரதத்தில் ஒரு பாடல் வருகிறது.

எனவேதான் இந்த தேசம் பாரத தேசம் பரத கண்டம் அவன் வழி வந்தவர்கள் பாரதியர்கள் என்று புராணங்களின் அடிப்படையிலேயே இவர்கள் வரலாற்றைத் திரித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆக பாரத தேசம் என்று இவர்கள் சொல்வதும் பாரதியம் என்று இவர்கள் சொல்வதும் இது இந்துக்களினுடைய நாடு என்பதைத்தான் வெளிப்படையாக பிரகடனப் படுத்திக் கொண்டு இருக்கிறது.

இந்தியாவை இந்தியா என்று அவர்கள் ஒப்புக் கொள்ளாத நோக்கத்தை ஆர்.எஸ்.எஸ். குரு கோல்வாக்கர் விளக்கியிருக்கிறார். இந்தியா என்றால் கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களை யும் உள்ளடக்கும், பாரதம் என்று சொன்னால் இந்துக்களை மட்டும் தான் குறிக்கும் என்று கூறுகிறார்.

எனவே இது மதத்தின் வழிப்பட்ட ஒரு நாடு என்பதற்காக பாரத தேசம் பரத கண்டம் என்று சங் பரிவாரங்கள் பேசுவதைப் போல் ஆளுநர் ரவி தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்ற பெயரை கண்டால் எரிச்சலாகி தமிழ் அகம் என்று வைக்கலாமா என்று ஆலோசனை கூற வந்திருக்கிறார்.

# இந்துவானால் என்ன? முஸ்லீமானால் என்ன?

தெலுங்கு மூலம்: **ஸைக்அலிகோரிஸய்யத்**
தமிழில்: **பா. ஆனந்தகுமார்**

நான் முஸ்லிமானால் என்ன?
நீ இந்துவானால் என்ன?
உன் கோவில் முன் அமர்ந்திருக்கும் பிச்சைக்காரர்கள்
இந்துவாக இருந்தாலும் நீ மார்போடு தழுவப்
போவதில்லை;
பக்கிரிகள் முஸ்லிமானாலும் நான் கட்டியணைக்க
போவதில்லை!

நீ எத்தனை விரதங்கள் இருந்தால் என்ன?
நான் எத்தனை நோன்புகள் நோற்றாலென்ன ?
நீ வரி கேட்பதற்கு எந்த பிரிவுகளைத் தேடுவாயோ
நானும் அதே பிரிவுகளைப்பின்பற்றுகிறேன்.
உனது மந்திரங்கள் சமஸ்கிருதம் ஆனாலும்
எனது ஸுரைக்கள் அராபியானாலும்
நமது பிள்ளைகளின் ஆங்கில வழி படிப்பை நிறுத்தும்
துணிவு உனக்குமில்லை எனக்குமில்லை!

உனது கோயிலுக்குப் போகும் பாதையில்
எந்தக் குண்டும் குழியுமான சாலையில்
முட்டி மோதி போவாயோ,
நானும் அதே கருங்கல் மிதக்கும் மட்டமான சாலையில்
மசூதிக்குப் போவேன்!

நீ பண்டிகைகளுக்கு எந்த சைவ சமையல் செய்தாலும்,
எனது பண்டிகைகளுக்கு
எந்த அசைவ சமையல் சமைத்தாலும்
மளிகைக் கடையில் விலைப்பட்டியல்
இருவரையும் பயமுறுத்தக் கூடியதாகத் தான் இருக்கிறது!

உனது கண் புருவ நடுவில்
பெரிய பொட்டு வைத்தாலும் கூட
எனது கண்களில்
சுருமா பூசினாலும்கூட
எனது கண்களுக்கும்
எந்த கலப்படமும் தெரியாமல்
நமது வாழ்க்கை ஏமாற்றமாகவே கழிகிறது!

நீ நதிகளில் புனித நீராட நினைத்தாலும்,
நான் நதிகளின் கரைகளில் எந்த மசூதியில்
‘ஒலு’ செய்ய விரும்பினாலும்
அசுத்தமாகி வறண்டு போகின்ற இந்த சகதியன்றி
நமக்கு போக்கிடம் ஏதுமில்லை!

நீ எந்த பானகம் செய்ய விழைந்தாலும்,
நான் எந்த பாயசம் செய்ய விரும்பினாலும்
நம் இருவரின் வாழ்க்கையும்
தண்ணீர் கேனுக்காக காத்திருக்கும் படியாகவே உள்ளது!

நீ வாஸ்து பார்த்து வீடு கட்டினாலும்,
நான் வாஸ்து இல்லாமல் வீடு கட்டினாலும்
நம் வீடுகளில் முன்னோடும் சாக்கடை
நமது பொறுமையை சோதித்துக் கொண்டே இருக்கிறது!

புண்ணிய தேசமென்று நீ நினைத்தாலும் கூட
நான் ‘சாரே ஜஹாஸே அச்சா’ என்று பாடினாலும் கூட
சுதந்திர காற்றை சுவாசிக்க முடியாமல் மாசினால்
இருவரும் மூக்கை பொத்திக்கொண்டு
அலைந்து திரிகிறோம்!

நாளும் கோமியம் குடித்தாலும் உனக்கு
ஊதியம் எவனும் கொடுக்க மாட்டான்;
புனித ஜம்ஜம் நீரை குடித்தாலும்
எவனும் எனக்கு சம்பளம் தர மாட்டான்.
அந்த தாடிக்கார அரேபியனின் தேசத்துக்கு
நான் போனாலும்
இதுவே ‘புண்ணிய பாரதம்’ என்று நீ நினைத்தாலும்
நாம் வியர்வை சிந்தாமல் நமக்கு எவனும் உணவு
வழங்கமாட்டான்!

நீ எந்த பண்டிகை நவராத்திரிகள் கொண்டாடினாலும்
நான் எந்த பண்டிகை மாதங்கள் கொண்டாடினாலும்,
கருப்புப் பணக் கொள்ளையர்களை
எந்த ஆட்சியாளரும் முற்றாகப் பிடிக்கவில்லை என்று
ஒப்புக் கொள்வோம்!

உனது சடங்குகளின் படி பெண்ணுக்குத்
திருமணம் செய்தாலும்
எனது முறைப்படி மகளுக்கு நிக்காஹ் செய்தாலும்
மனதுக்குள் நல்ல மாப்பிள்ளை கிடைப்பானா?
இல்லையோ? என்று பயந்து கொண்டு
தேடுவோம் இருவரும்!

நம் இருவருக்கும் தெரியும்,
மழைக் காலம் வருகிறதென்றால் காகித படகின்
ஆனந்தம் போய்
நமது குடியிருப்புகள் எப்போது மூழ்கும் என்கிற
கவலை உனக்கும்
இருக்கிறது எனக்கும் இருக்கிறது!

நம் இருவருக்கும் தெரியும்,
எனது கஜல் காவாலி பாடல்களை போலவே
உனது இனிய ஆலாபனையும்
ஏதோ ஆபத்தில் இருக்கிறது;
நம் இருவரின் குரல்களை ஏதோ ஒரு அரசியல்
ஆக்கிரமிப்பு செய்யப் போகிறது!

நாம் இருவருக்கும் தெரியும்
நான் முஸ்லிமானால் என்ன?
நீ இந்துவானால் என்ன?
நாம் இருவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய
உண்மை ஒன்று மட்டும் இருக்கிறது
நீ அமெரிக்கா போனாலும்
நான் அரேபியா போனாலும்
நாம் எல்லோரும் இந்தியர்கள்!
இந்து முஸ்லிம் சகோதரர்கள்!

ஆகையால் அரசியல் தலைவர்களின் சுயநலத்துக்காக
நாமேன் ஒருவரை ஒருவர் வசை பாட வேண்டும்?

- அக்டோபர்- நவம்பர், 2022 மாத ‘தாமரை’ இதழ்

## திருமகன் ஈவெரா துயர முடிவு: கழகம் ஆழ்ந்த இரங்கல்



ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவெரா மரணமடைந்து விட்டார் என்ற செய்தி தாங்க முடியாத ஒரு துயரமாகும். உண்மையிலேயே இது மிகுந்த அதிர்ச்சியை தருகிறது. அவரது தந்தை காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவரான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களுக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு தேசிய இயக்கத்தின் முன்னணி தலைவராக இருந்தும் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், இப்போதும் தன்னை ஒரு பெரியாரியவாதியாக, பகுத்தறிவாதியாக, பெரியார் குடும்பத்தைச் சார்ந்தவராகப் பெருமையுடன் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அதேபோலத் தான் தன்னுடைய மகன் திருமகன் ஈவெரா அவர்களையும் வளர்த்தார். திருமகன் ஈவெரா அவர்களும் தலைச்சிறந்த ஒரு பெரியாரியவாதியாகவே வாழ்ந்தார்; பகுத்தறிவுவாதியாகவேத் திகழ்ந்தார். சென்னையில் திருமகன் ஈவெரா திருமணம் புரட்சிகரமாக நடந்தது. பதிவாளரை நேரில் அழைத்து அதில் மணமக்கள் கையொப்பம் பெற்று சில நிமிடங்களில் மணவிழா புரோகித மறுப்புடன் நடந்து முடிந்தது.

இந்த இழப்பு உண்மையிலே தாங்கிக் கொள்ள முடியாத ஒரு இழப்பு. 46 வயது இளைஞர், துடிப்பு மிக்க சட்டமன்ற உறுப்பினர், எத்தனையோ பணிகளுக்காக தமிழ்நாடு அவருக்காகக் காத்திருந்தது, கொடுமையான அந்த மாரடைப்பால் அவர் விடை பெற்றுக்கொண்டார் என்பது வேதனையிலும் வேதனையான செய்தி.

இந்த துயரத்தை ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள் எப்படி தாங்கிக் கொள்ளப் போகிறார் என்பது நமக்கு தெரியவில்லை. ஆனால் காலம் தான் அவருடைய உள்ளத்தில் ஏற்பட்ட இந்த ஆறாப் புண்ணுக்கு மருந்தாக மாறும். இதிலிருந்து அவர் மீண்டு வர வேண்டும் என்பதே நமது விருப்பமாகும்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை மீண்டும் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அறிவியல் துறையில் பெண்களின் பங்கேற்பு குறைவது ஏன்?

**ம.கி. எட்வின் பிரபாகரன்**

ஆராய்ச்சியாளர்களில் 33.3% பெண்கள் இருக்கின்ற போதும், தேசிய அறிவியல் கூடங்களில் (NSAs) 12% பெண்கள் மட்டுமே உள்ளனர். செயற்கை நுண்ணறிவுத் துறையிலும் 1:4 விகிதத்தில் தான் பெண்களும் ஆண்களும் உள்ளனர். ஒருங்கிணைந்த அறிவியல், தொழில்நுட்ப, பொறியியல் & கணிதத் துறைகளிலும் (STEM) பெண்களின் எண்ணிக்கை குறைவே! யுனெஸ்கோ புள்ளியியல் நிறுவனத்தின் கணக்கெடுப்பின் படி, உலகளவில் STEM துறைகளில் 29.3% பெண்களே உள்ளனர். ஐ.நா. சபையின் பிப்ரவரி 2020 தகவல்களின்படி, (1901 - 2019) வரை நோபல் பரிசைப் பெற்றவர்கள் 900 பேர்; அவர்களில் வெறும் 53 பேர் மட்டுமே பெண்கள். STEM துறைகளில் கற்கும் மாணவர்களில் 35% பேர் பெண்கள்.

அனைத்து துறைகளிலும் ஆண்களும் பெண்களும் சம பங்களிப்பை வழங்கும் நிலை ஏற்பட வேண்டுமென்று உலகத்தார் எவ்வளவோ முயன்று பார்த்த பின்பும் இன்னும் அந்த இலக்கை நாம் அடைய வில்லை. அறிவியல் துறையும் இதற்கு விதி விலக்கல்ல. விஞ்ஞானத் துறையில் பாலினச் சமத்துவத்தை அடைவதற்காக 2015இல் இருந்து ஐநா சபை பிப்ரவரி பதினொன்றாம் நாளை "அறிவியல் துறையில் பணியாற்றும் பெண்களுக்கான தினமாக" அனுசரிப்பது குறிப்பிடத்தக்கது.

2022 ஐ.நா. சபை அறிக்கையின்படியும், ஆராய்ச்சி மானியங்களைப் பெறுவதில் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகவும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருப்பதை அறிய முடிகிறது.

செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி உள்ளிட்ட செய்தி ஊடகங்களில், காட்சிப்படுத்தப்பட்ட, பங்கேற்ற & பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட பெண்களின் எண்ணிக்கையை ஐநா சபை கணக்கெடுத்து, அறிக்கையாக வெளியிட்டுள்ளது. 114 நாடுகளை உள்ளடக்கியதாகவும் 20 ஆண்டு களின் தரவுகளை ஒருங்கிணைத்ததாகவும் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின்படி, செய்தி ஊடகங்களில் 24% பெண்கள் மட்டுமே கேட்கப்பட்டும், படிக்கப்பட்டும், காட்டப்பட்டும் உள்ளனர்.

இதே ஆய்வில், ஊடகங்களில் வெளியான 46% செய்திக் கதைகள், பாலினங்களைப் பற்றிய கற்பிதங்களை வலுவூட்டுவதாக உள்ளதும் தெரிய வந்துள்ளது. 4% செய்திக் கதைகள் மட்டுமே, இத்தகைய கற்பிதங்களை கேள்விக்குட்படுத்தும் விதமாக வந்துள்ளன. அதோடு, ஊடகங்களால் பேட்டி எடுக்கப் பட்டவர்களில், ஐந்தில் ஒரு பங்கினர் மட்டுமே பெண்களாவர்.

19ஆம் நூற்றாண்டில், பெண்களின் ஓட்டுரிமைக்காகவும் பூர்வீக அமெரிக்கர் களின் உரிமைகளுக்காகவும் போராடியவர் Matilda Joslyn Gage. பெண் விஞ்ஞானிகளின் சாதனைகள் ஒப்புக் கொள்ளப்படாமல் பாரபட்சம் காட்டப் படுவதற்கு, "Matilda விளைவு" என்று பெயர்.

"கண்டுபிடிப்பு மேதைமையும், இயந்திர மேதைமையும் இல்லாதவள் பெண் என்கிற கருத்தை விட அதிகமாக, பெண்கள் குறித்து வேறு எந்த பொதுவான கருத்தும் வலியுறுத் தப்படுவதில்லை" என்றும், "பெண்களின் அறிவியல் கல்வி முற்றிலும் புறக்கணிக்கப் பட்டிருந்தாலும் கூட, உலகின் முக்கியமான சில கண்டுபிடிப்புகள் பெண்களால் நிகழ்த்தப்பட்டுள்ளன" என்றும் 1883இல் Matilda எழுதியுள்ளார்.

"Matilda விளைவு" என்ற சொற்றொடரை முதன் முதலில் தன்னுடைய ஆய்வுக் கட்டுரையில் உருவாக்கியவர், Cornell பல்கலைக்கழக பேராசிரியர் Margaret Roisiter ஆவார்.

"பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பலதரப்பட்டவை; உலகெங்கும் மாறு பட்டவை. ஆனால் அவை, "வளங்களுக்கான அணுகல் உரிமை இல்லாமை, வாய்ப்பு களுக்கான அணுகல் உரிமை இல்லாமை, கற்பிதங்கள் மற்றும் பாலினப் பக்கச்சார்புகள்"ஆகியனவற்றைச் சுற்றியே இருக்கின்றன. இவை, இந்தத் துறைகளில் நுழைவதற்கான சாத்தியக்கூறுகளைக் கூட, பெண்கள் கருத்தில் கொள்வதைத் தடுக்கின்றன" என்று பாலின ஆய்வு நிபுணரும் நெய்ரோபியில் (கென்யா நாடு) உள்ள சர்வதேச கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் சர்வதேச ஆலோசகருமான Katie Tavenner கருத்துரைத்துள்ளார்.

ஜூன் 2022 Nature ஆய்விதழின் அறிக்கையில், இளநிலை தொழிற்பதவிகளில் பெண்கள் அதிகமாகவும் முதுநிலை தொழிற் பதவிகளில் ஆண்கள் அதிகமாகவும் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது; பெண்களின் தொழில் ஆயுட்காலம் குறுகியதாக இருப்பதையும், பெண்களுக்கு வழங்கப்படும் சம்பளமும் குறைவாக இருப்பதையும் காண முடிகிறது.

இனி இந்தியாவுக்கு வருவோம். நவம்பர் 2021 Current Science இதழின் அறிக்கையில், அறிவியல் தொடர்பு & கொள்கை ஆராய்ச்சி தேசிய நிறுவனமும் (SCPR) அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி சபையும் (CSIR) இணைந்து நடத்தும், Science Reporter இதழைப் பற்றிய அறிக்கை வெளியாகி உள்ளது?

Science reporter இதழில் (2010 - 2020) வரை வெளியான கட்டுரைகளில், பெண்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் ஏன் குறைவாக உள்ளன? பலர் இணைந்து எழுதிய கட்டுரைகளில் பலரில் ஒருவராக இருக்கும் பெண்கள், தனிக்கட்டுரைகளை எழுதாதது ஏன்? என்று இவ்வறிக்கை கேள்வி எழுப்பி யிருக்கிறது. இந்தியப் பெண்களுக்கு உரிய பதவி உயர்வு வழங்கப்படுவதில்லை என்றும் இந்தியப் பெண்கள் தங்கள் குடும்பங்களை கவனிப்பதற்காக தொழிலை பாதியில் விட்டுவிட்டுச் செல்கின்றனர் என்றும் ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) இடித்துரைத்துள்ளது. 2018 இல் வெளியான உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையில், 149 நாடுகளில் இந்தியா 108ஆவது இடத்தில் உள்ளது.

குழந்தைப் பிறப்பு, குழந்தை வளர்ப்பு, வீட்டு மேலாண்மை, வேலையிடங்களில் பாலின பக்கச்சார்புகள், கலந்தாய்வுக் கூட்டங்களில் உரையாடல்களை ஆண்களே வழிநடத்த முனைதல் போன்ற எண்ணற்ற சிக்கல்களை பெண்கள் எதிர்கொள்கின்றனர். அதே வேளையில், அனைத்து துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதும் மறுப்பதற்கில்லை.

எடுத்துக்காட்டாக, 1942இல் அன்றைய இந்திய அரசால் ஆரம்பிக்கப்பட்ட CSIRஇல், 80 ஆண்டுகளுக்குப் பின் முதல்முறையாக, பொது இயக்குனர் பதவிக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த கலைச்செல்வி என்ற பெண் விஞ்ஞானி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதே போல் மற்ற துறைகளிலும் பெண்கள் பெறும் விருதுகளின், பல்கலைக்கழக ஆய்வு வாய்ப்புகளின், ஆராய்ச்சி மானியங்களின் எண்ணிக்கைகள் சற்று அதிகரித்துள்ளன. எனினும், ஆண்களுக்கு நிகரான வளர்ச்சியை பெண்கள் பெறுவதற்கு இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது.

நாட்டின் அறிவியல் முன்னேற்றம் & சாதனைகளுக்குப் பயனளிக்கும் விதமாக, சமத்துவத்திற்கான தடைகளை அகற்றுவது, பன்முகத்தன்மையைக் கொண்டாடுவது மற்றும் நேர்மறை கலாச்சாரத்தை அதிகரிக்க பெண்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பது போன்ற செயல்களில் அதிக கவனத்தைச் செலுத்துவதே பாலினச் சமத்துவத்தை விரைவில் அடைவதற்கான வழிமுறை ஆகும்.

(Source: 2022 டிசம்பர் மாத Science Reporter இதழ்)

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் அரசியல் அறிவு வரவேண்டும் என்பதே எங்களுக்கு விருப்பம் எதிர் வரும் காலத்தில் சிறிதளவாவது அரசியல் அறிவை பெற்றவராக அண்ணாமலை வளர வேண்டும் . 2016ஆம் ஆண்டில் காபிடே உரிமையாளர் சித்தார்த் ரபேல் வகை கடிகாரத்தை வாங்கியுள்ளார், அவரிடமிருந்து அன்றைய ஐபிஎஸ் அதிகாரியாக இருந்த அண்ணாமலை அந்த ரபேல் வகை கடிகாரத்தை வாங்கியுள்ளதாக செய்திகள் வந்துள்ளன, அப்படியானால் அது இலஞ்சக் கணக்கில் தான் வரும். அமைச்சர்களின் ஊழல் பட்டியலை வெளியிடுவேன் என கூறும் அண்ணாமலை ரபேல் கைகடிகாரம் பெற்ற இலஞ்ச ஊழல் கணக்கிற்கு முதலில் பதில் சொல்ல வேண்டும்" என்று கொளத்தூர் மணி தெரிவித்தார்.

கூட்டத்தில் மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவேரா அவர்களுக்கும், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தூத்துகுடி மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர் பால்ராஜ் அவர்களுக்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய நூல்களை நாட்டுடைமை ஆக்கிய திராவிட மாடல் தமிழ்நாடு அரசிற்கு நன்றியும், தமிழ்நாட்டின் முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட கழகத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். இறுதியாக கோபி ஒன்றிய அமைப்பாளர் செகநாதன் நன்றி தெரிவித்தார். நிகழ்விற்கான ஏற்பாடுகளை அருளானந்தம், இராவணன் ஆகியோரும், உணவிற்கான ஏற்பாடுகளை சுப்பிரமணியம், செகநாதன் ஆகியோர் செய்து இருந்தனர்.

**வழி காட்டும் சேலம் மாவட்டம்**

கழக ஏட்டுக்கு 527 ஓராண்டு மற்றும் 106 அய்ந்தாண்டு சந்தாக்கள்

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.300
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 8973341377

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## மாவட்டக் கழகக் கலந்துரையாடல்கள் எழுச்சி நடை

# சேலம் மேற்கு, கிழக்கு மாவட்டங்கள், கழக ஏட்டுக்கு ரூ. 2,48,500 சந்தாத் தொகை

**சேலம் :** சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் 05.01.2023 வியாழன் காலை 10.00 மணியளவில் கொளத்தூர் எஸ்.எஸ்.மஹாலில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டம் கடவுள் மறுப்பு - ஆத்மா மறுப்புடன் தொடங்கியது.

கூட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சி.கோவிந்தராஜ் வரவேற்புரையாற்றினார். அவர் தனது உரையில் சேலம் மேற்கு மாவட்டத்தில் 2023ஆம் ஆண்டிற்கான 'புரட்சிப் பெரியார் முழக்க' சந்தா இதுவரை 475 ஆண்டு சந்தாக்களும், 84 ஐந்தாண்டு சந்தாக்களும் பெறப்பட்டுள்ளது எனவும் மீதமுள்ள சந்தாக்களை விரைவில் முடித்து கொடுக்க வேண்டுமாய் தோழர்களிடம் கேட்டுக் கொண்டார். (கிழக்கு மாவட்ட சந்தாக்களையும் சேர்த்து ரூ.2,48,500/- வழங்கப்பட்டது)

தொடர்ந்து பேசிய கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், "தமிழ்நாடு அரசு நமது இயக்க செயல்பாடுகளை உன்னிப்பாக கவனித்து வருகிறதென்றும், தோழர்கள் அனைவரும் நமது இயக்க ஏடான (புரட்சிப் பெரியார் முழக்க'த்தை முழுமையாகப் படிக்க வேண்டுமென்றும், பொதுச்செயலாளரின் 'வாட்ஸ் ஆப்' உரைகளை முழுமையாகக் கேட்டு அதனை மற்ற நண்பர்களுக்கும் பகிர வேண்டும்" எனவும் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர்கள் காவை ஈஸ்வரன், அ.சக்திவேல், சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் தமது கருத்துக்களை எடுத்துரைத்தனர். தொடர்ந்து கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒன்றிய, நகர, கிளைக் கழக பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் தங்களது கருத்துக்களை கூறினார்கள். குறிப்பாக அனைவரும் இனிவரும் காலங்களில் கிராமங்கள்தோறும் தெருமுனைக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்ற கருத்தை முன்வைத்தனர்.

பெரியார் முழக்க ஐந்தாண்டு, ஆண்டு சந்தாவாக **1,25,000** ரூபாய் கழகத் தலைவரிடம் கொடுக்கப்பட்டது.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமது உரையில் "தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் தோழர்களை சந்திப்பதன் நோக்கம் என்பது கழக அமைப்புகளை புதுப்பித்தல் மற்றும் பெரியார் முழக்க சந்தா சேர்ப்பு ஆகிய இரண்டும் என்றும், பெரியார் முழக்க செய்திகளை எத்தனை பேர் படிக்கின்றோம் என்பதை ஆய்வு செய்ய வேண்டுமெனவும், நமது இயக்க ஏடான பெரியார் முழக்கத்தை அனைத்து நூலகங்களுக்கும் செல்வதற்கு தோழர்கள் முயற்சிக்க வேண்டுமென்றும், கழக இணையதளத்தை தோழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், அனைத்துப் பகுதி பொறுப்பாளர்களும், தோழர்களும் புதிய உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த வேண்டுமென்றும், அதே போல் வருகின்ற தோழர்களை தக்கவைக்க முயற்சி செய்ய வேண்டுமெனவும்" குறிப்பிட்டு பேசினார்.

மறைந்த மேட்டூர் திராவிடர் கழக தலைமைக் குழு உறுப்பினர் K.A. சந்திரசேகரன், திராவிடர் விடுதலைக் கழக தூத்துக்குடி மாவட்ட முன்னாள் தலைவர் பால்ராஜ், ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவெரா ஆகியோர் மறைவிற்கு சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிறைவாக கொளத்தூர் நகர தலைவர் ராமமூர்த்தி நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது. கலந்து கொண்ட தோழர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**ஈரோடு :** திராவிடர் விடுதலைக் கழகம், ஈரோடு தெற்கு மாவட்டத்தின் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 07.01.2023 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் ப.ரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலையிலும் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழகத்தின் எதிர்கால செயல்பாடுகள் குறித்து தோழர்களுடன் விவாதிக்கப்பட்டது. கழக வார ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' சந்தா குறித்தும் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- 31.12.2022 அன்று கொளத்தூர் தார்காடு கழகத் தோழர் விஜயகுமாரின் தந்தை இயக்க முன்னோடியான ஆசிரியர் இராமசாமி மறைவுற்றார். 01.01.2023 அன்று மறைவுற்ற தூத்துக்குடி மாவட்ட முன்னாள் தலைவர் வே.பால்ராசு, 04.01.2023 அன்று மறைந்த ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் தந்தை பெரியாரின் கொள்ளுப் பேரனுமாகிய திருமகன் ஈவெரா ஆகியோருக்கு அஞ்சலியும் இரங்கலையும் இக்கூட்டம் செலுத்துகிறது.

- கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய நூல்களை தமிழ்நாடு அரசு நாட்டுடைமையாக்கியதற்கு நன்றி தெரிவிப்பதோடு, பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன் அவர்களின் பெரியாரிய பணியினை கௌரவிப்பதற்கான முன்னெடுப்பே நூல்கள் நாட்டுடைமையாக்கம் என்றே இக்கூட்டம் கருதுகிறது. நூல்களை நாட்டுடைமையாக்க எந்தவித வேண்டுகோள் விடுக்காமலும் கௌரவித்த தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட கழகம் பாராட்டு தெரிவிப்பதோடு நன்றியையும் மகிழ்வோடு தெரிவிக்கிறது.

- எதிர்வரும் பிப்ரவரி 2023, ஈரோட்டில் சனாதன எதிர்ப்பு பொதுக்கூட்டம் நீலகிரி நாடாளு மன்ற உறுப்பினர் ஆ.இராசா, மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோரை அழைத்து நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி தலைவராக பழனிசாமி, செயலாளராக பேரன்பு, அமைப்பாளராக பிரபு ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட தலைவர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் எழிலன், மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, மாநகரத் தலைவர் குமார், தமிழ்நாடு அறிவியல் மன்றம் சிவக்குமார், மணிமேகலை, ஜோதி, இரவி, கோபிநாத், கார்மேகம், செந்தில், அய்யப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஈரோடு வடக்கு :** ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் ஜன. 8 அன்று மாலை திராவிடர் விடுதலை கழகத்தின் மாவட்ட அளவிலான ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் சிறப்பு அழைப்பாளராக கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் பரப்புரைக்கான பயண திட்டங்கள் குறித்து நிர்வாகிகளிடையே உரையாற்றினார்.

பின்னர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது, கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை அறநிலையத்துறையின் கீழ் உள்ள கோவில்களின் அறங்காவலர்களாக நியமிக்கக் கூடாது என்ற உயர்நீதிமன்றத்தின் கருத்து குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து பேசுகையில்....

"அரசின் கொள்கை முடிவுகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முடிவு செய்வதுதான் சரியாக இருக்கும்; நீதிமன்றங்களின் உத்தரவு பொருத்தமானதாக இருக்காது. நீதிமன்றங்கள் வரம்போடு நடந்து கொள்ள வேண்டும் என்பது எமது விருப்பம்" என்றார்.

திராவிட அரசியல் காரணமாக தமிழ்நாடு பின்னோக்கி சென்றுவிட்டதாகக் கருத்து தெரிவித்த ஆளுநர், அவருக்கான வேலையை மட்டும் ஒழுங்காக செய்தால் போதும் அரசின் அறிவுரைப்படி செயல்படுவது மட்டுமே அவரது பணியாகும் ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவின் அரசியலை இங்கே புகுத்துவது ஆளுநரின் பணி அல்ல என்றும் கூறினார்.

இஸ்லாமிய மற்றும் கிறித்துவர்களின் விழாக்களைப் புறக்கணித்து விட்டு அரசு பணத்தில் தசாரா பண்டிகைக்கு கொலு வைத்துக் கொண்டாடி வருகிறார். ஆளுநருக்கு விருப்பமாக இருந்தால் கமலாலயம் சென்று பாஜகவில் பொறுப்பு வாங்கி கொண்டு அவ்வாறு செயல்படலாம். தமிழக சட்டமன்றத்தின் உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரால் ஒப்புதல் பெற்ற பிறகே தமிழ்நாடு என பெயர் மாற்றப்பட்டது.

எனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாத சந்தேகம் ஆளுநர் ரவிக்கு வந்துள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. ஆளுநர் முதலில் மகாராஷ்டிராவின் பெயரை மொழிபெயர்த்து தெரிந்து கொண்ட பின் அதனை மாற்றிக் காட்டட்டும் பிறகு தமிழகத்தைப் பற்றி பேசுவதை பார்க்கலாம் எனவும், ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டத்திற்குக் கையெழுத்திட நேரமில்லை சூதாட்டம் நடத்தும் முதலாளிகளை வைத்துக் கொண்டு பேசுகிறார். ஆளுநர் தனது வாயை அடக்கி கொண்டு இருந்தால் மரியாதை என்றார்.

ஈஷா மையத்தில் நடைபெறும் சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்து கொண்டுள்ளது பற்றி கேட்டதற்கு கழகத் தலைவர் அளித்த பதில்:

"சாமியார் அனைவருமே போலியானவர்கள் தான். சாமியார்களில் இதுவரை கைது செய்யப்பட்ட சாமியார் கைது செய்யப்படாத சாமியார் என இரண்டு வகை தான் உள்ளது. இதில் கைது ஆகும் சாமியார் பட்டியலில் ஈஷா சாமியார் இடம்பெறுவார் என்று தெரிகிறது" என்றார்.

பாஜக தலைவர் அண்ணாமலை பத்திரிக்கையாளர்களை அவமதிக்கும் செயல் குறித்து பேசுகையில்,

"அண்ணாமலை இப்போது பார்ப்பனர்களின் கட்சியில் இருப்பதால் அவர்களைப்போல அண்ணாமலைக்கும் ஆணவம் வந்து விட்டதால் தான் அப்படிப் பேசி வருகிறார். அண்ணாமலை இன்னும் காவல்துறை அதிகாரி மனநிலையிலிருந்து விடுபடாமல் உள்ளார். அரசியல் கட்சியின் தலைவர் என்ற மனநிலைக்கு வரவில்லை என்பது அவரது நடவடிக்கைகள் காட்டுகிறது அவருக்கு

(3ஆம் பக்கம்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 13th January 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN